# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2049 ● ஜூலை 28, 2018

Weekly E-paper ● July 28, 2018




# இன்னும் எத்தனை எத்தனை காட்சிகளோ!

● சுப.வீரபாண்டியன்

மத்தியில் யார் ஆண்டாலும், தமிழகத்திற்கென்று ஒரு மதிப்பு இருந்தது. நாம் விரும்பாத ஜெயலலிதா ஆட்சி வரையில் கூட அது இருந்தது. இன்று நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தில்லி சென்ற தமிழகத்தின் துணை முதல்வர், 20 நிமிடங்கள் காக்க வைக்கப்பட்ட பின், இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனால் திருப்பி அனுப்பப்படுகிறார்.

இது வெறும் நிகழ்ச்சியன்று. பல்வேறு நுண் அரசியலை உள்ளடக்கியுள்ள நாடகம். தமிழகத்திற்கு நேர்ந்திருக்கும் அவமானம். அரசு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியுள்ளவர்களின் ஒப்புதல் வாக்குமூலம்.

இந்த நாடகக் காட்சியில் நேரடியாக மேடைக்கு வந்திருப்பவர்கள் இருவர். அவர்களுள் ஒருவர் ஓ.பன்னீர்செல்வம், இன்னொருவர் நிர்மலா சீதாராமன். திரைக்குப் பின்னால் பல முகங்கள்!

ஓ.பன்னீர்செல்வம் நடத்திய நாடகங்கள் எத்தனை! ஜெயலலிதா கல்லறையில் நடத்திய 'யோகா யுத்தம்' தொடங்கி, எடப்பாடியுடன் நடத்திய 'தர்ம யுத்தம்' வரையில் அவர் அரங்கேற்றிய எந்த நாடகமும் வெற்றி பெறவில்லை. இப்போது வேறு நோக்கத்துடன் தில்லி சென்ற அவர், 'நன்றி சொல்லும் நாடகத்தை' முன்வைத்தார். மத்திய அரசுக்குப் பாராட்டு என்று கருதி, தன் தம்பிக்கு இராணுவ விமானத்தைத் தந்த நிகழ்வை அவர் வெளியிட்டார். அதுவே அவருக்குக் கேடாக முடிந்துவிட்டது.



தான் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதை இப்படிப் போட்டு உடைத்து விட்டாரே என்று மத்தியில் கோபம் என்கின்றனர். அது மட்டுமன்று, அதனையும் தாண்டிச் சில உண்மைகள் மறைந்து கிடக்கின்றன என்று வேறு சிலர் கூறுகின்றனர். வேறு என்ன, 'கொடுக்கல் வாங்கலில்' எங்கோ தவறு நடந்திருக்கும்.

இல்லையானால், நேற்று, சட்டத்திற்குப் புறம்பாக இராணுவ விமானத்தை அனுப்பியவர்கள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க்க வேண்டும் என்று எடப்பாடியைக் கூட விட்டுவிட்டு, ஓ.பன்னீர்செல்வத்தைக் கேட்டவர்கள், இன்று வீட்டு வாசலுக்கு வந்தவரைப் பார்க்காமல் திருப்பி அனுப்புவார்களா?

அமைச்சர் நிர்மலா சீதாராமன் பற்றியும் சில செய்திகளைப் பகிர வேண்டியுள்ளது. ஊடகவியலாளர்களிடம் பேசும்போது, அவர் உடல்மொழியில் ஓர் ஆணவம் பீறிட்டு எழுவதைப் பலரும் கவனித்திருக்கக் கூடும். சில வேளைகளில் 'இரண்டு ஜெயலலிதா' போல அந்தத் தோற்றம் இருக்கும். இருக்கத்தானே செய்யும். ஸ்ரீரங்கத்தில் பிறந்த 'அவாள்' ஆயிற்றே! அதனால்தானே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொன். ராதா கிருஷ்ணனுக்குச் சாதாரணத் துணை அமைச்சர் பதவி. மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத இந்த அம்மையாருக்கு, மிகப் பெரிய பாதுகாப்பு அமைச்சர் பதவி.

இந்த அம்மையார்தான், தமிழகத்தின் (ரகசிய) முதலமைச்சர் வேட்பாளராம். அதில் என்ன ரகசியம் வேண்டியிருக்கிறது என்று கேட்கலாம். தேர்தலுக்கு முன்பே அதைச் சொன்னால் வருகிற ஒரு விழுக்காடு வாக்குகளும் வராமல் போய்விடுமே என்ற கவலைதான்.

இதுவரை காணாத காட்சிகளையெல்லாம் தமிழகம் கண்டுகொண்டிருக்கிறது. எத்தனை ஏமாற்று, எத்தனை பித்தலாட்டம், எத்தனை அவமானம்! இந்த நாடகத்தில் இன்னும் எத்தனை எத்தனை காட்சிகள் இப்படி இருக்கின்றனவோ தெரியவில்லை! ●



## தலைவர் கலைஞர் 50

தி.மு.கழகத்தின் தலைவராகக் கலைஞர் 1969 ஜூலை 27 அன்று பொறுப்பேற்றார். 49 ஆண்டுகள் நிறைவடைந்து, 50 ஆம் ஆண்டில் இப்போது அடியெடுத்து வைக்கின்றார். ஓர் அரை நூற்றாண்டு காலம், ஒரு கட்சியின் தலைவராக இருப்பவர் நம் தலைவர் கலைஞர் மட்டுமே! அவர் படைத்த பல வரலாற்று நிகழ்வுகளில் இதுவும் ஒன்று!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.peravainoolagam.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**

## தோழர் சுபவீக்கு சிறப்பு விருது!




**14.07.2018**ஆம் நாள் அமெரிக்காவின் சிகாகோ தமிழ்ச் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட ‘இலக்கிய மாலை’ நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் கலந்துகொண்டார். அந்நிழ்வின் போது பகுத்தறிவு, சாதி ஒளிப்பு, பெண் விடுதலை, ஆதிக்க எதிர்ப்பு போன்ற பெரியாரியக் கொள்கைகளைக் கடந்த கால் நூற்றாண்டிற்கும் மேலாகச் சமூக மேம்பாட்டிற்காக அவர் ஆற்றி வரும் அளப்பரிய சேவையைப் பாராட்டி சிகாகோ தமிழ்ச் சங்கம், தோழர் சுபவீக்கு ‘சிறப்பு விருது’ வழங்கி, சங்கத்தின் தலைவர் மணி குணசேகரன், செயலாளர் பிரேம் சுண்டிவாக்கம், துணைத் தலைவர் பிரசாத் ராஜாராமன், மருத்துவர் சோம.இளங்கோவன், பாபு, சரவணன் ஆகியோர் சிறப்பு செய்தனர்.




*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநரின் தூய்மைப் பணி!

**எ**ன்னதான் இருந்தாலும் சும்மா சொல்லக்கூடாது நம்முடைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் அவர்களை.

ஆளுநர் என்றால் நோகாமல் ஆளுநர் மாளிகையில் இருந்துக்கொண்டு ஓய்வு எடுப்பதும், எப்போதாவது ஏதாவது கையெழுத்து போடுவது மட்டுமன்று என்பதை உணர்ந்து செயல்படுவர் தமிழக ஆளுநர்.

மாநில அரசின் நிர்வாகத்தில் தலையிடுவதாக யார் என்ன சொன்னாலும் சரி, எதிர்கட்சிகள் எப்படி கூப்பாடு போட்டாலும் சரி அதைபற்றி எல்லாம் கவலைப் படத் தேவையில்லை என்று செயலில் காட்டிக் கொண்டிருப்பவர் அவர்.

மாநில ஆட்சியில் அதிகார வரம்பிற்கு மேலாகத் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்த அவர் முதலில் முயன்றார் என்பது உண்மைதான்.

தளபதி ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. நடத்திய கருப்புக் கொடிப் போராட்டம் உட்பட பிற போராட்டங்களினால், ‘பெருந்தன்மையோடு’ கொஞ்சம் பின் வாங்கிவிட்டார் அவர்.

அதனால் என்ன?

மாநில அரசு செயல்பாட்டில் எப்படியாவது தலையிட வேண்டும் என்பது அவருக்கு அவரின் மேலிடம் கொடுத்த ‘அஜெண்டா’ அல்லவா.

அதனால்தான் தெருக்களைக் கூட்டிச் சுத்தம் செய்யும் வேலையை ‘அசராமல்’ செய்துக் கொண்டிருக்கிறார் நம் ஆளுநர்.

அண்மையில் திண்டுகல்லுக்குச் சென்ற ஆளுநர் அங்கேயும் இதே பணியைச் செய்திருக்கிறார்.

குப்பையே இல்லாத சுத்தமான சாலையில், எங்கிருந்தோ கொண்டுவரப்பட்ட ‘சுத்தமான’ குப்பைகளைக் கொட்டி, அதையும் நம் ஆளுநர் வரும்வரையும் கால நேரம் பார்க்காமல் காவல் காத்திருக்கிறார்கள் சிலர்.

ஆளுநர் வந்தவுடன் வழக்கம் போல ஒரு நீண்ட பெருக்குமாரை கையில் எடுத்துக்கொண்டு அந்தக் குப்பைகளைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்துவிட்டார்.

என்னே பணி! வேறு எந்த மாநிலத்திலும் இப்படி ஒரு பணியை, அந்தந்த மாநில ஆளுநர்கள் செய்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது. நம் ஆளுநர் அதைச் செய்கிறார்.

சரி! சுத்தம் செய்வது என்றால் ‘கொட்டி வைக்கும்’ குப்பையைக் கூட்டுவது மட்டும்தானா?

இந்தியாவில் நாட்டைச் சுத்தப்படுத்தும் வேலையில் கோடிக்கணக்கான மக்கள் மலம் அள்ளிக்கொண்டிருக்கிறார்கள். இதில் லட்சக் கணக்கானோர் தமிழகத்தில் அடங்குவர்.

இந்த வேலையைச் செய்பவர்கள் கடவுளின் குழந்தைகள் என்று ஒரு முறை காந்தி சொன்னார்.

இப்பொழுது ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தும் இதனைக் கொஞ்சம் கவனத்தில் எடுக்கலாமே.

குப்பையைக் கூட்டுவது மட்டுமல்லாமல், மலம் அள்ளி அகற்றும் அந்த மாபெரும் பணியைச் செய்து மனித சமூதாயத்திற்குத் துணையாகவும், வழிகாட்டியாகவும் ஆளுநர் இருப்பாரா?

இவை இரண்டையும் ஆளுநர் செய்தால் அவரே தமிழ்நாட்டின் நிரந்தர ஆளுநர்.

# உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கறிஞர்களை அனுப்பாத தமிழக அரசு

நேர்காணல்:
**மா.உதயகுமார்**

நீட் தேர்வைத் தமிழில் எழுதிய மாணவர்களுக்கு 196 கருணை மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழங்கிய தீர்ப்புக்கு உச்ச நீதிமன்றம் ஜூலை 20 அன்று இடைக்காலத் தடை விதித்தது. இவ்வழக்கு பற்றியும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றியும் வழக்குத் தொடர்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திரு.டி.கே.ரங்கராஜன் அவர்களிடம் கருஞ்சட்டைத் தமிழர் இதழுக்காக நேர்காணல் செய்தோம். CPM அலுவலகத்தில் நம்மை இன்முகத்துடன் வரவேற்று தேநீர் கொடுத்து உபசரித்துப் பின்னர் பேட்டியளித்தார். பேட்டி வருமாறு:

### ? இந்த வழக்குத் தொடரப்பட்டதன் பின்னணி குறித்து

பொதுவாக 'நீட்' என்கிற மருத்துவப் படிப்பிற்கான தகுதி மற்றும் நுழைவுத் தேர்வைத் தமிழகம் தொடர்ந்து எதிர்த்து வருகிறது. கிட்டத்தட்ட அனைத்துக் கட்சிகளுமே எதிர்க்கின்றன. சட்டமன்றத்தில் 'நீட்' டை எதிர்த்து மசோதா நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதா குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது குடியரசுத் தலைவருக்குச் சென்றதா இல்லையா என்பது தெரியாத சூழ்நிலையில் நான் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதினேன். அப்போது பிரணாப் முகர்ஜி அவர்கள் குடியரசுத் தலைவராக இருந்தார். "உங்கள் மசோதா இங்கு வரவில்லை. அதனால் உங்கள் கடிதத்தை உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பியிருக்கிறோம்." என்று குடியரசுத் தலைவர் அலுவலகத்திலிருந்து பதில் வந்தது. இந்த நேர்காணல் நடக்கும் இன்று வரை உள்துறை அமைச்சகம் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு இந்த மசோதாவை அனுப்பவில்லை. இந்நிலையில் இந்த ஆண்டு கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து அய்ம்பதாயிரம் மாணவர்கள் தமிழ்நாட்டிலிருந்து நீட் தேர்வு எழுதினார்கள். அதில் 24000 த்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ்வழியில் தேர்வு எழுதியவர்கள்.இந்தக் கேள்வித்தாளைப் படித்துவிட்டு எங்களுடைய மாணவர் அமைப்பு மொழிபெயர்ப்புத் தவறாக இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்தினார்கள். அதே போல டெக் ஃபார் ஆல் (Tech-ForAll) என்கிற தனியார் அமைப்பும் (NGO) இதைப் பற்றி பேசத் தொடங்கினார்கள். நாங்கள் இதைக் கட்சியில் பரிசீலித்து வழக்குத் தொடரலாம் என முடிவெடுத்து என் பெயரில் வழக்குத் தொடர்ந்தோம்.

### ? சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வழக்கு நடந்த முறை பற்றி

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை இவ்வழக்கைச் சிறப்பான முறையில் விசாரித்தார்கள். தமிழக அரசின் வழக்கறிஞர், மத்திய அரசின் வழக்கறிஞர், CBSEயின் வழக்கறிஞர் ஆகியோர் வந்திருந்தனர். இந்த மொழிபெயர்ப்பு எதன் அடிப்படையில் செய்யப்பட்டது என்கிற கேள்வியை நீதிமன்றம் எழுப்பியது. அதற்கு அவர்களிடம் பதில் இல்லை. 35,000 பேர் தேர்வு எழுதிய பீகாரில் 37,000 பேருக்கு தேர்வு முடிவுகள் வந்தது. 3 மணிநேரம் எழுத வேண்டிய தேர்விற்கு அரை மணிநேரம் தாமதமாகக் கேள்வித்தாள் கொடுக்கப்பட்டதை எதிர்த்து, மும்பையில் மாணவர்கள் வழக்குத் தொடர்ந்து அந்த அரைமணிநேரத்திற்கு 180 மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. அதை உச்சநீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது. இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டினோம்.



**டி.கே.ரங்கராஜன்**

ஆனால் CBSE மதுரைக் கிளையில் பெரிதாக ஒன்றும் வாதாடவில்லை. அவர்கள் வாதாடியதெல்லாம், "டி.கே. ரங்கராஜனுக்கும் இவ்விவகாரத்திற்கும் தொடர்பில்லை. பாதிக்கப்பட்டோர் யாரும் வழக்குத் தொடரவில்லை." என்பதே. பின்னர் நீதிபதிகள் தெளிவாகத் தமிழ்வழியில் தேர்வு எழுதிய மாணவர்கள் அனைவருக்கும் 49 கேள்விகளுக்கு 196 மதிப்பெண்கள் வழங்க வேண்டும் என்கிற தீர்ப்பை வழங்கினார்கள். அதை நாம் பத்திரிக்கைகளில் படித்திருப்போம்.

### ? உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் முறை பற்றி

CBSE மேல் முறையீடு செய்வார்கள் என்பதைத் தெரிந்துதான் கேவியட் மனு தாக்கல் செய்தேன். இதில் CBSE இடையில் வசதியாகச் செய்துகொண்ட அல்லது இயற்கையாக அமைந்த ஏற்பாடு, கலந்தாய்வு முடிந்த மாணவர்கள் சிலர், எங்களுக்கு இடம் வேண்டும் என்று நீதிமன்றத்தை நாடினார்கள். அங்கும் "டி.கே.ரங்கராஜனுக்கும் இவ்விவகாரத்திற்கும் தொடர்பில்லை." என்றே CBSE வழக்கறிஞர் வாதாடினார். ஆகஸ்ட் 1ஆம் தேதிக்குள் கலந்தாய்வை முடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே இருக்கிற தீர்ப்பைச் சுட்டிக் காட்டி இது மிகவும் தாமதமானது என்று சொல்லி, மேலும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை அளித்த தீர்ப்பின்படி கிட்ட தட்ட 24,000 மாணவர்களுக்கு 196 மதிப்பெண்கள் அளித்தால் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட திறமையான மாணவர்கள் பின்னுக்குச் சென்று விடுவார்கள் என்கிற முறையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை வழங்கிய தீர்ப்பிற்கு இடைக்காலத் தடை விதித்திருக்கிறது உச்சநீதிமன்றம். எங்களுடைய வாதம் அப்போது என்னவென்றால், 24,000 மாணவர்களுக்கும் இல்லையென்றால் அதிகபட்சமாக எத்தனை பேருக்கு இடம் கொடுக்க முடியும், இடங்களை எப்படி அதிகப்படுத்துவது என்பதாகத் தான் இருந்தது. ஆனால் அந்த வாதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

### ? மற்ற மாநில மொழிகளில் தேர்வு எழுதியவர்களுக்கு இந்தச் சிக்கல் இல்லையா?

11 மாநிலங்களில் இந்தச் சிக்கல் இருக்கிறது. ஆனால் அங்கு அதை எதிர்த்துப் போராட இயக்கங்கள் இல்லை.

### ? இவ்வழக்கில் தமிழக அரசின் செயல்பாடு?

தமிழ்நாடு வழக்கறிஞர்கள் உச்சநீதிமன்றத்திற்கு வரவேயில்லை. பிரகாஷ் ஜவடேகர் "நாங்கள் தமிழ்நாட்டிடம் தான் மொழிபெயர்ப்பிற்கு அனுப்பினோம்" என்று மாநிலங்களவையில் குறிப்பிடுகிறார். அதை எதிர்த்து ஒரு சொல் சொல்லுவதற்குக் கூட இந்த அரசிற்குத் துணிவில்லை.

### ? இவ்வளவு தவறுகளையும் அத்துமீறல்களையும் செய்த CBSEக்கு நீதிமன்றமன்றம் சொன்னது என்ன?

CBSEயின் தவறை உயர்நீதிமன்றம் உச்சநீதிமன்றம் இரண்டுமே மிகக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன. CBSEயும் தவறை ஒப்புக்கொண்டது.

### ? இவ்வழக்கில் அடுத்தகட்ட முயற்சிகள் பற்றி

அடுத்து தமிழ்வழியில் தேர்வு எழுதிய மாணவர்கள் எத்தனை பேருக்கு இடம் கொடுக்க வாய்ப்பிருக்கிறது என்கிற பட்டியலையும் தயார் செய்து கொண்டிருக்கிறோம். வருகிற ஏழாம் தேதி அதைத் தாக்கல் செய்வோம். ●

# மருத்துவர் முத்துலட்சுமி அம்மையார்



● வெற்றிச்செல்வன்

இந்தியாவிலேயே மருத்துவப்பட்டம் பெற்ற முதல் பெண்மணியான டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் பெண்ணினத்திற்காகப் போராடிய முன்னோடிகளில் ஒருவர். நீதிக்கட்சி அரசின் சாதனைகளுள் ஒன்றாகக் கருதப்படும் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதில் பெரும்பங்காற்றியவர் இவர். அன்றைய தமிழ்ப் பேரரசர்களின் நிலவுடைமைச் சமூகத்தில் தோன்றிய தேவதாசி முறை பிற்காலத்தில் தமிழ்ச் சமூகத்தின் ஒழுக்கச் சீர்கேடுகளில் ஒன்றாக ஆகியது. பொட்டுக் கட்டுதல் என்னும் சடங்கின் வாயிலாக வரைமுறையற்ற பாலுறவு புனிதமாக்கப்பட்டது. கோயில் புரோகிதர்கள் மற்றும் ஜமீன்தார்களின் பாலியல் தேவைகளை நிறைவு செய்வது தேவதாசிகளின் பணியானது.


இத்தகைய சூழ்நிலையில், தேவதாசி முறையின் கொடுமையினை எதிர்த்துப் பேசியும், எழுதியும் தொடர்ந்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார் முத்துலட்சுமி அம்மையார். The awakening demand for Devadasi legislation, Why should the Devadasi institution in the Hindu temples be abolished ஆகிய அவரது இருநூல்கள் தேவதாசி முறை ஒழிப்பின் அவசியத்தை எடுத்துரைப்பன.

முத்துலட்சுமி அம்மையாரின் தேவதாசி ஒழிப்பு மசோதாவை ஆதரித்து, தந்தை பெரியார் குடிஅரசு இதழில் தொடர்ந்து பல கட்டுரைகளை எழுதினார். "கடவுளின் பெயரால் பெண்களுக்கு, விபச்சாரித்தனம் செய்ய பொட்டுக்கட்டுதல் என்னும் பெயரில் அனுமதிச்சீட்டு வழங்கப்படுகிறது" என்று சாடிய பெரியார், "ஒரு வகுப்பாரே தலைமுறை, தலைமுறையாகத் தங்கள் பெண்களை இதற்காக உதவிவர வேண்டும் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது? அந்த தேசாபிமானமும், நாட்டின் கற்பு அபிமானமும் கொண்டதான இந்தப் பரோபகாரம் எல்லா வகுப்புக்கும் முறைப்படி வரட்டும் என்பதாக தாராள நோக்கத்துடன் பார்த்து, அதை மற்ற வகுப்புக்கும் பிரித்து விடுவதில் என்ன ஆட்சேபணை?" என்று கேட்கிறார். (குடி அரசு, 30.10.1927). ஈரோட்டில் நடந்த இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் (1930) முத்துலட்சுமி அம்மையாரின் மசோதா விரைவில் சட்டமாக்கப் படவேண்டும் என்ற தீர்மானத்தைத் தந்தை பெரியார் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

டாக்டர் முத்துலட்சுமியின் பணி பெண்கள் நலத்துடன் நின்றுவிடவில்லை. 1949 ஆம் ஆண்டு புற்றுநோய் நிவாரண நிதி அமைப்பை ஏற்படுத்தினார். சென்னை அடையாறில் புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தையும், மருத்துவமனையையும் உருவாக்கினார்.

பெண்ணினத்திற்குப் பெருமை சேர்த்த டாக்டர் முத்துலட்சுமி அம்மையாரின் பிறந்த நாள் ஜூலை 30.

●



தேவதாசி முறை, தனியுடைமையின் சித்தாந்தப்படி ஏற்பட்ட சமூக ஊழல், அனைத்தும் தனிப் பொருளாக மதிக்கப்படுகின்ற படியால், பெண்களும் இந்த சித்தாந்தப்படி தனியுடைமையாகின்றனர். காசு கொடுத்தவனுக்கெல்லாம் சொந்தமாகக் கருதப்படுகின்றார்கள். பொதுவுடைமையில் ஆணும், பெண்ணும் சரி சமத்துவமுள்ளவர்களாதலால் ஒருவரை ஒருவர் காசு கொடுத்து வாங்க முடியாது.

– தோழர் சிங்காரவேலர்
(குடி அரசு, 15.11.1931)






## ‘டெட்ராய்டில்’ குடும்பக் கலந்துரையாடல்!



24.07.2018 அன்று மாலை டெட்ராய்ட்டில், ‘பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம்’ நண்பர்களுடன் நடைபெற்ற ஒரு குடும்பக் கருத்துரையாடலில் தோழர் சுபவீ, வசந்தா அம்மையார் ஆகியோர்.






Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.